In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 181/2016 |
| PW: | 6 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 15-04-2026 நாள்: புதன் |
| பெயர்: | திருமலைக்குமார் |
| த/பெ: | சேதுகுமார் |
| ஊர்: | தென்காசி |
| வேலை: | மருத்துவர் |
| வயது: | 44 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.04.2026**
(Accused A1 to A3 absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**முதல்விசாரணை**

1) நான் தற்போது தென்காசி மாவட்ட அரசுதலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 21.04.2016 ம் தேதி பணி மருத்துவராக கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தேன். அப்போது மதியம் 12.10 மணியளவில் கோவில்பட்டி பாரதி நகர் 3 வது தெரு, சத்தியஜோதி என்பவரது மனைவி மஞ்சுளா (வயது 26) என்னிடம் சிகிச்சைக்காக வந்தார்.

2) அவர் என்னிடம் தன்னை தனது வீட்டில் வைத்து அன்று காலை 11.30 மணியளவில் 2 அடையாளம் தெரிந்த நபர்கள் கட்டைகளால் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்து பார்த்த போது அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை.

3) அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அதன் பின்பு போலிசார் காயச்சான்று பெற என்னை அணுகினர். ஆனால் மேற்குறிப்பிட்ட நோயாளி மருத்துவம் முடிவதற்கு முன்பே மருத்துவருக்கு தெரியாமல்

மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டார். எனவே அவருக்கு காயச்சான்று வழங்க இயலாது என்று கூறினேன். ( **மேற்படி சான்று அ.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) காயச்சான்றில் நேரமானது 11.30 மணி என்று எழுதப்பட்டு 10.00 மணி என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் திருத்தம் செய்யவில்லை. one known person என்று எழுதப்பட்டு பின்னர் Two known person என்று எழுதப்பட்டிருந்தது என்றால் அதை நான் தான் திருத்தம் செய்தேன். காயம்பட்ட நபர் முதலில் ஒரு நபர் என்று கூறிவிட்டு பின்னர் இரண்டு நபர் என்று கூறியதால் திருத்தம் செய்தேன்.

2) அதில் எனது சுருக்கொப்பம் இல்லை என்றால் சரிதான்.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.